IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.257/2022

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | PERUMAL |
| FATHER'S NAME | : | MURUGAN |
| VILLAGE | : | NAVATHAMPATTI |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 8th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

3,4,5 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்குபற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் எனது மகளை பழனி கவுண்டர் மகன் பொன்னையன் என்பவர் கேலி செய்ததாகவும், எனது மகள் மேற்படி விவரத்தை எனது சித்தப்பா மகன் முத்து குமரனிடம் சொன்னதாகவும், எனது சித்தப்பா மகன் பொன்னையன் என்பவரை அடித்துவிட்டதாகவும்ஹ 27.01.2013 அன்று மாலை 05.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது பொன்னையன், வேலு, நாராயணசாமி ஆகியோர் என்னை அசிங்கமாக திட்டி அடித்ததாகவும், பின்னர் நான் சுற்று தெரு கோவிலிடம் சென்றபோது அங்கு என்னை திட்டிகொண்டிருந்தவர்களை கேட்டபோது வேலு என்பவர் செங்கல்லால் வலது கண் புருவத்தில் அடித்ததாகவும், மருது மண்வெட்டியால் அடித்ததாகவும், என் தம்பி, அப்பா, மனைவி தடுத்தபோது அவர்களையும் அடித்ததாக அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**

**Judicial Magistrate,**
**Gudiyatham.**